அரசுத் துறையில் ஸ்டவ் தொழிற்சாலை ஏற்படுத்துதல்.

129—(* வினா எண். 3045) திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சமையல் வாயுவினால் எரியும் ஸ்டவ்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை அரசுத்துறையில் ஏற்படுத்தும் திட்டம் ஏதும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டம் ஏதும் இல்லை.

சென்னை மாநகராட்சி மோட்டார் வாகன வரி

130—(* வினா எண் 3256) திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகராட்சிக்கு மோட்டார் வாகன வரியாக (Taxation Fees) வசூலிக்கப்படும் தொகையிலிருந்து சாலைகளைப் பழுது பார்ப்பதற்கு குறிப்பிட்ட தொகை ஒதுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மோட்டார் வாகன வரியினை அரசு மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களுக்கிடையே பகிர்ந்திடுவது பற்றி தற்பொழுது இருந்துவரும் முறையை மறுபரிசீலனை செய்ய நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரையை அரசு ஆய்வு செய்து மாநிலத்தின் நிதிநிலை சீர்குலையாமல் இருக்கும் பொருட்டும், தற்பொழுது இருந்துவரும் முறை சீராக நடைபெற்று வருவதால் இம்முறையை தொடர்ந்து நீடித்து வரலாம் என அரசு முடிவெடுத்துள்ளது.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தனியார் வாகனங்கள் மூலம் வசூலிக்கப்படும் வரி எவ்வளவு ? அரசு வாகனங்கள் மூலம் வசூலிக்கப்படும் வரி எவ்வளவு என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.